**O.S. No. 77/2025**
**Date :26.02.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW 3 **திரு. சரண்ராஜ்**

**குறுக்கு விசாரணை :**

1. நான் வாதி சிலம்பரசனிடம் சொட்டுநீர் சம்பந்தமான பொருட்கள் லோடு இறக்குவதற்கு சென்ற வகையில் அவர் எனக்கு பரிச்சயம். எனக்கு அவ்வபோது கூலி தருவார், மாத சம்பளம் கிடையாது. கொரனா சமயத்தில் நான் வேலையில்லாமல் இருந்தபோது அதன் பிறகு நான் வாதியிடம் அவ்வப்பொழுது வேலைக்கு செல்வேன். புரோநோட்டு எழுதியதாக சொல்லும்பேனா பேனா ரீஃபில் பேனா, மை பேனா கிடையாது. சாட்சிகள் மற்றும் செல்வராஜ் ஆகியோர் எந்த பேனாவில் கையெழுத்து போட்டார்கள் என்றால் லெட்டு பேனாவால் கையெழுத்து.

2. புரோநோட் எழுதியது சாட்சிகள் கையெழுத்து போட்டது, செல்வராஜ் கையெழுத்து போட்டது ஆகியவை ஒரே பேனாவால் எழுதியதா என்றால் நான் எனது பேனாவில் எழுதினேன். அவரவர் பேனாவில் கையெழுத்து போட்டார்கள். உதயகுமார் சிலம்பரசனிடம் வேலை பார்க்கிறாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது தந்தை பெயர் சங்கிலிகாளை. செல்வராஜ் கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் சிலம்பரசன் வகையறாக்கள் மீது புகார் கொடுத்ததில் எனது அப்பாவும் அந்த வழக்கில் எதிரியாக வருகிறார் என்றால் சரிதான், இரண்டு வழக்குகளின் எனது அப்பா எதிரியாக வருகிறார் என்றால் சரிதான். அது கடமலைக்குண்டு குற்ற எண். 180/2025 மற்றும் 244/2025 என்றால் அதன் எண்கள் எனக்கு தெரியாது. பத்திரிக்கை செய்திகளில் பார்த்தேன். அந்த வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3. எனது அப்பா சங்கிலிக்காளை சிலம்பரசனிடம் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். சுமார் 6 ஆண்டுகளாக வேலை செய்து வந்தார். சிலம்பரசன்

செல்வராஜுக்கு கொடுத்ததாக சொல்லும் கடன் தொல்லையை நான் வாங்கி எண்ணி கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் தாவா புரோநோட்டின் அடிப்படையில் செல்வராஜ் கடன் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நானும், எனது அப்பாவும் சிலம்பரசனிடம் வேலை பார்த்து வருவதால் எனது அப்பாவும் சிலம்பரசனும் சொல்லி சிலம்பரசனுக்கு ஆதரவாக தற்போது பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. தாவா புரோநோட்டு உண்மையான புரோநோட் அல்ல என்றால் சரியல்ல. அதில் வரக்கூடிய சாட்சிகள் அனைத்தும் சிலம்பரசனுக்கு வேண்டப்பட்ட சாட்சிகள் என்றும், எல்லோரும் சேர்ந்து ஆள்மாறாட்டம் செய்து இந்த தாவா புரோநோட்டு போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.26 17:44:58 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.